**19.09.2025**

**வா.சா.1**

**திரு மோகன்குமார்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (2,3 பிரதிவாதிகள் தரப்பில்)**

என்னுடைய கொள்ளு தாத்தா வெங்கடேச அய்யர், கொள்ளு பாட்டி வெங்கலெட்சுமி அம்மாள் என்றால் சரி. வெங்கடேச அய்யர் 1973 லும் வெங்கலெட்சுமி அம்மாள் 1977 லும் இறந்து விட்டார்கள் என்றால் சரி. நான் தற்போது தாக்கல் செய்துள்ள வழக்கு பதிவு செய்யப்படாத உயில் மூலம் சொத்து கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. மேற்படி உயில் வெங்கலெட்சுமி அம்மாள் எழுதி வைத்த உயில். வெங்கடேச அய்யர் வெங்கலெட்சுமி அம்மாளுக்கு வெங்கடகிருஷ்ணன், அவயம்பாள், கமலாம்பாள் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரி. அதில் அவயம்பாள், கமலாம்பாளுக்கு வாரிசுகள் கிடையாது என்றால் சரி. வெங்கடேச அய்யர், வெங்கலெட்சுமி அம்மாள் ஆகியோர் மெத்த படித்தவர்கள் என்றால் சரி. 1954 ல் எனது தாத்தா, கொள்ளு தாத்தா, கொள்ளு பாட்டி ஆகியோர் பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரி. 1954 லேயே பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் சூழ்நிலையில் உயில்

மட்டும் ஏன் பதிவு செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் தாத்தா, பாட்டிகள் படித்தவர்கள் எனவும் அவர்கள் உயில் எழுதி வைத்திருந்தார் பதிவு செய்திருப்பார்கள் எனவும் பின்னர் வேறு உயில் பொய்யாக ஏற்படுத்தப்பட்டது எனவும் சொன்னால் தவறு. எதனடிப்படையில் வருவாய் துறை சொத்துக்களை பராமரிக்கிறது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வருவாய் துறை சொத்துக்களை பொறுத்து பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம்தான் நிர்வகிக்கிறது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 1926 ல் Resettlement மூலம் வருவாய் துறை பதிவேடுகளை நிர்வகித்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது A Register மூலம் வருவாய் துறை நிர்வகிக்கிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1979-1987 ஆண்டுகளில் UDR மூலம் வருவாய் துறை பதிவேடுகளை பராமரிக்கிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது எனக்கு வயது 23. என் தாத்தா சொத்துகளை பொறுத்து அய்யர் பண்ணை என சொல்லுவார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. முன் வழக்கு விபரங்கள் பற்றி எனக்கு யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் என் பாட்டி ராஜலெட்சுமி சொல்லிதான் தெரியும், எனக்கு நேரடியாக தெரியாது. வழக்கின் சர்வே எண் 183/1A, அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை பொறுத்து உயிலில் உள்ளபடி A, B, C ஷெட்டியூல் சொத்துக்கள் உள்ளன.

அதில் B ஷெட்டியூல் சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் விளம்புகை மற்றும் வச பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. என் தகப்பனாரின் சகோதரிகளை இந்த வழக்கில் பார்டியாக சேர்க்கவில்லை என்றால் சரி. என் தகப்பனாரின் உடன் பிறந்த சகோதரிகளில் ஒருவரான லலிதா 04.10.2020 ல் இறந்து விட்டார் என்றால் சரி. வெங்கடகிருஷ்ணனின் வாரிசுகளில் என் அப்பா சத்தியநாராயணன் மட்டுமே ஆண் வாரிசு என்றால் சரி. அவரின் மகன்தான் நான். வெங்கடகிருஷ்ணன் 2008 லும் ராஜலெட்சுமி 2018 லும் இறந்து விட்டார்கள் என்றால் சரி. தாவா சொத்து சம்மந்தமாக பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண் 114/1990 வழக்கு நடந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கு சம்மந்தமாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலோ வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரி. 2005 சட்ட திருத்தத்தின்படி பெண் வாரிசுகளுக்கும் 2005 க்கு முன்னர் உள்ள பூர்வீக சொத்துக்களில் பாக வீதம் உண்டு என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பூர்வீக சொத்தின் அடிப்படையிலும் விளம்புகை பரிகாரத்தின் அடிப்படையிலும் என் தகப்பனாரின் சகோதரிகளை வழக்கில் சேர்த்திருக்க வேண்டும் எனவும் அவர்களை வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு. பண்ணை மானிய விபரம் பற்றி எனக்கு தெரியாது. என் கொள்ளு தாத்தாவிடம் 2, 3

பிரதிவாதிகளின் தாத்தா வண்டி ஓட்டுவது, பால் கறப்பது, கால்நடை பராமரிப்பது போன்ற வேலைகளை செய்து வந்ததால் 133/1A, 183/1A சொத்துக்களை அவர்களுக்கு கொடுத்தார்கள் என்றால் தவறு. எங்களுக்கு உரிமை இருந்தாலும் அந்த உரிமையை விட்டுக் கொடுத்து விட்டதால் பரிகாரம் கிடைக்க கூடியதல்ல என்றால் தவறு. 80 ஆண்டுகளுக்கு மேலாக 3 தலைமுறைகளாக பண்ணை வேலை பார்த்து தற்போது பண்ணை மானியம் ஒழிக்கப்பட்ட நிலையில் அவரவர்கள் தனியே இருந்து வருகிறார்கள் என்றால் 183/1A ல் ஒரு பகுதியில் ஆக்கிரமிப்பாளர்களாக இருந்து வருகிறார்கள். அது பெரிய விஸ்தீரமான பகுதி. தாவா சொத்தில் எனது கொல்லு தாத்தா, என் தாத்தா, என் அப்பா காலத்திலிருந்து 2, 3 பிரதிவாதிகள் இருந்து வருகிறார்கள் என்றால் தவறு. வெங்கடேச அய்யர், வெங்கலெட்சுமி அம்மாளுக்கு சொந்தமான சொத்தை பொறுத்துதான் நான் உரிமை கோருகிறேன் என்றால் சரி. மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடந்த அ.வ.எண் 388/1989 வழக்கு எதனடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கு சமரச முறையில் முடிக்கப்பட்டது என்றால் அது என்னை கட்டுப்படுத்தாது. 2, 3 பிரதிவாதிகளுக்கு என் அத்தை லலிதா 23.10.1992, 15.06.2014 தேதிகளில் கிரய உடன்படிக்கை செய்து அதனடிப்படையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் அது

என்னை கட்டுப்படுத்தாது. மேற்படி சொத்தில் வடமேற்கு பக்கத்தில் ஒரு பகுதியை ஆக்கிரமித்து அனுபவித்து வருகிறார்கள். 2, 3 பிரதிவாதிகள் எத்தனை வருடங்களாக தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் 3 தலைமுறைகளாக குடியுரிமை ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டு பூரண நில உரிமையாளர்களாக 2, 3 பிரதிவாதிகள் இருந்து வருகிறார்கள் என்றால் தவறு. பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றம் மற்றும் மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்குகளின் அடிப்படையில் சொத்தை உரிமை கொண்டாடி வருகிறார்கள் என்றால் தவறு. சர்வே எண் 183/1 A சொத்தை பொறுத்து எனது கொள்ளு பாட்டி வெங்கலெட்சுமி அம்மாள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என்அத்தை லலிதாவின் மகனான முதல் பிரதிவாதியின் பெயரிலிருந்து எனது கொள்ளு பாட்டி வெங்கலெட்சுமி அம்மாள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 2, 3 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பி உரிய முறையில் விசாரணை செய்யப்பட்டதா என்றால் அனுப்ப தேவையில்லை, எனக்கு தெரியாது. என் அப்பா செல்வாக்குள்ளவராக இருந்த காரணத்தினால் உரிய முறையில் விசாரணை செய்யாமல் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. வழக்கு சொத்தை பொறுத்து ஏற்கனவே 2 நீதிமன்றங்களில் முடிவாகி விட்டபடியால் சமூகம் நீதிமன்றத்தில் அதே வழக்கு

சொத்தை பொறுத்து முன் தீர்ப்பு தடை அடிப்படையில் பரிகாரம் கோர முடியாது என்றால் தவறு. 15.10.2015 ல் என் அத்தை லலிதா அவரது மகன் ஹரிகர வெங்கட்ராமனுக்கு பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரி. மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல என பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதனடிப்படையிலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு. வழக்கு மூலம் சரியல்ல எனவும் மற்றும் உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை எனவும் சொன்னால் தவறு. வழக்கு பற்றிய விபரம் எதுவும் தெரியாமல் என் பெற்றோர்களின் பேச்சை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. 2, 3 பிரதிவாதிகளை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.09.19 15:18:25 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.